பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஞு மார்கழி மீ 12 உ வியாழக்கிழமை (27-12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 31

# சம உரிமை வழங்குவதே நிலையான தீர்வுக்கு வழி

## ஐரோப்பிய நாடுகள் சமுகத்தின் நாடாளுமன்றம் அறிவுறுத்து

லண்டன், டிசம்பர் 27

**இலங்கையில் நடக்கும் மோதல்களுக்கு நிலையான தீர்வு காணவேண்டுமெனில், எல்லா இன மக்களுக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட்டு, அவற்றுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும்.**

**இவ்வாறு ஐரோப்பிய நாடுகள் சமுகத்தின் நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றில் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.**

★ காணாமற் போனவர்கள் குறித்து விசாரணை செய்ய எதிர்வரும் பெப்ரவரியில் ஐ.நா. செயலாற்றல் குழு ஒன்றை அனுமதிப்பதாக அளித்த வாக்குறுதியை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும்.

★ காணாமற் போனோர், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் பற்றி விவரிக்க சுயாதீனமான விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

★ பொலிஸ் நிலையங்கள் மற்றும் ஆயுதப் படைகளின் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகலரின் விவரங்களையும் இலங்கை அரசு உடனடியாக வெளியிட வேண்டும்.

★ இலங்கையில் மனித உரிமைகள், சட்டம் ஒழுங்கு சரிவர அமுல் செய்யப்படுவதில் முன்னேற்றம் காணப்படுவதாகக் கருதினால் மட்டுமே, இனி மேல் ஐரோப்பிய சமூக நாடுகள் அந்த நாட்டுக்கு உதவி வழங்க வேண்டும்— என்றும் அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஐரோப்பிய சமுகத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி கிறிஸ்டீன் ஒட்டியும், திரு. அலெக்ஸ் சிமெத்தும் இந்தத் தீர்மா

[2 ஆம் பக்கம் பார்க்க]

## கோர்பிக்கு அதிகாரம்

லண்டன், டிச. 27

சோவியத் அதிபர் மிக்கெயில் கோர்பச்சேவுக்கு மேலும் அதிக அதிகாரங்களை வழங்கும் தீர்மானத்தை சோவியத் நாடாளுமன்றம் நேற்று நிறைவேற்றியது. அதன்படி சோவியத் மந்திரி சபை கோர்பச்சேவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வரும். (உ)

## ஆசிரியர் பரீட்சை நடக்கவில்லை

யாழ்ப்பாணம், டிச. 27

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில்க- நேற்று நடைபெறவிருந்த -இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள்வினாத் தாள் வந்து சேராததால் நடைபெறவில்லை. (உ-3)

## மிதி வெடியில் சிக்கியோர்

# இரத்தப் பெருக்குடன் 2 மணி நேரம் துடிப்பு!

யாழ்ப்பாணம், டிச. 27

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா தாண்டிக்குளப் பாதையால் வந்து மிதி வெடியில் சிக்கிக் காலிழந்த ஐந்து பேரும், படுகாயமுற்ற ஐந்து பேரும், கடும் இரத்தப் போக்குடன் சம்பவம் நடந்த இடத்தில் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் கவனிப்பாரற்றுக் கிடந்து பதைபதைத்தனர்.

காமினி வித்தியாலய இராணுவத்தினரின் பணிப்பின் பேரில் குறிப்பிட்ட பாதையால் வந்த இவர்கள் காலை 11 மணி அளவில் விபத்துக்குள்ளாகினர். ஆனால் ஒரு மணிக்குப் பின்னரே செஞ்சிலுவைச் சங்க சர்வ

[2 ஆம் பக்கம் பார்க்க]

## மா விலை குறைந்தது

கொழும்பு, டிச. 27

கோதுமை மாவின் விலை நேற்று நள்ளிரவு முதல் ஒரு கிலோ 12ரூபா 45 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மாவின் பழைய விலை 13 ரூபா 45 சதமாகும்.

நேற்று நள்ளிரவு முதல் பாணின் விலையும் 4ரூபா 90 சதமாக குறைக்கப்பட்டது. [உ-எ]

# பயணிகள் பயந்து திரும்ப முயன்றபோது அதே பாதையால் செல்ல எச்சரித்தனர்

## வவுனியா மிதிவெடிச் சம்பவத்தில் சிக்கியவர் தகவல்

யாழ்ப்பாணம், டிச. 27

''சேறும், சகதியும், பற்றைகளும் நிறைந்த பகுதியால்- அங்கே இருந்த ஒற்றையடிப் பாதையால்-போகுமாறு இராணுவத்தினர் பணித்தனர்.

அப்போது அவர்கள் எம்மைச் சோதனை செய்யவில்லை.

தாம் காட்டிய பாதையால் செல்லப் பயந்து பயணிகள் திரும்ப முற்பட்ட போது இராணுவத்தினர் வானத்தை நோக்கிச் சுட்டு, வெருட்டி, அந்தவழியால் போகுமாறு நிர்ப்பந்தித்தனர்; எச்சரித்தனர்''.

-இவ்வாறு தெரிவித்தார் ஊரெழுவைச் சேர்ந்த திரு. செல்லையா நடராஜா.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இருந்து புறப்பட்டு மிதிவெடி விபத்தால் பாதிக்கப்பட்டவர்களில் திரு. நடராசாவும் ஒருவராவார்.

மிதிவெடியின் சிதறலால் அவருக்குமுகத்தில் காயமேற்பட்டுள்ளது. மூக்குக் கண்ணாடியும் பறந்து சிதறிவிட்டது.

செவ்வாய்க்கிழமை மிதிவெடிச்சம்பவம்குறித்து அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

நான் கொழும்பிலிருந்து

[2 ஆம் பக்கம் பார்க்க]

## பறித்த போத்தல்களில் நத்தார் கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், டிச. 27

நத்தார் கொண்டாட்டங்களுக்காக கொழும்பிலிருந்து பிரயாணிகள் கொண்டுவந்த குடிவகைப் போத்தல்கள் வவுனியாவில் படையினருக்கு விருந்தானது.

குடிவகைப் பிரியர்கள் நத்தார் கொண்டாட்டத்தை ஒட்டி கொழும்பில் இருந்து குடிவகைகளைக் கொண்டுவந்தனர்.

பூந்தோட்டப் பகுதியில் சோதனையிட்ட படையினர் அவற்றைப் பறிமுதல் செய்தனர்.

கொண்டுவந்தவர்களுக்கு ஏமாற்றம்! ஆனால் படையினருக்குக் குதூகலம்!! கொண்டாட்டம்!!! (உ-3)

## பேச்சு நடத்த அங்கீகாரம்

பஞ்சாப் பிரச்சினை தொடர்பாக புதுடில்லி அரசுடன் பேச்சுக்கள் நடத்த அகாலிதள் [மான்] பிரிவுத் தலைவர் சிர்மத் சிங் மானுக்கு அகாலிதளத்தின் லோங்கோவால், பாதல், மான் பிரிவுகள் நேற்று அங்கீகாரம் அளித்தன. சீக்கிய மாணவர் இயக்கமும் பேச்சுவார்த்தை நடத்துவதை ஆதரித்துள்ளது. [உ-எ]

## மூளைக்காய்ச்சல்; 9 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிச. 27

மூளைக் காய்ச்சல் காரணமாக அனுராதபுரத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர். பொலன்னறுவை மாவட்டத்தில்நான்குபேரும்குருணாகலை மாவட்டத்தில் ஒருவரும் இந்நோய் காரணமாக உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## விடுபட்டு வந்தவர் தகவல்

# கடற்படை முகாமில் பெரும் சித்திரவதை!

குருநகர், டிச. 27

தாளை, வேப்பங் கொட்டை மற்றும் இலை, குழைகளை தந்து அவற்றைச் சாப்பிடுமாறு வற்புறுத்திய படையினர், நாம் அவற்றைச் சாப்பிட்டு ஓங்காளித்துத் துப்பியபோது மீண்டும் மீண்டும் அவற்றைச் சாப்பிட வைத்தனர்.

கடந்த நவம்பர் மாதம் கடலில் வைத்து கடற்படையால் கைது செய்யப்பட்டு, அண்மையில் விடுவிக்கப் பட்ட - பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த - தர்மராஜா என்பவர் இவ்வாறு கூறினார்.

கடலில் வைத்துப் பிடித்த

[2 ஆம் பக்கம் பார்க்க]

## கட்டணம் அதிகரிக்கும்

ஜீ சி. ஈ. உயர்தர மற்றும் சாதாரண தர பரீட்சைகளுக்கான கட்டணங்களை அதிகரிப்பது என கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதுவரை ஜீ. சி. ஈ. (உயர் தர) பரீட்சைக் கட்டணமாக அறவிடப்பட்ட 80 ரூபாவுக்கு பதிலாக 150 ரூபாவும்- சாதாரண தரப் பரீட்சைக்கு 35 ரூபாவுக்கு பதிலாக 75 ரூபாவும் இனி அறவிடப்படும்.

# கூடுதல் ஆயுதங்கள் கேட்கிறார் கருணாநிதி

சென்னை, டிச. 27

இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த கூடுதல் ஆயுதங்களை அனுப்பி வைக்கும்படி மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளது.

முதலமைச்சர் கருணாநிதி நேற்று செய்தியாளரிடம் இத்தகவலை வெளியிட்டார்.

தமிழ்நாடு பொலீஸாரிடம் தற்போது 200 ஏ. கே. ரைபிள்கள் மட்டுமே உள்ளன என்றும் அவர் சொன்னார்:

தமிழ் நாட்டின் ஆயிரம் கிலோ மீற்றர் கரையோரப் பகுதியில், அங்கொன்று, இங்கொன்றாக ஊடுருவல் இருக்கத்தான் செய்யும் என்று கூறிய முதலமைச்சர், ஊடுருவலைத் தடுக்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டிருப்பதாகவும்-

எல்லைக் காவல் படையில் நான்கு அணிகளை அனுப்பி வைக்கும்படி மத்திய அரசை தாம் கேட்டிருப்பதாகவும் தெரிவித்தார். [உ-எ]

# வவுனியாவில் நிற்கும் ஐம்பது லொறிகள்

யாழ்ப்பாணம், டிச. 27

கொழும்பில் இருந்து உணவு மற்றும் பொருள்களுடன் வந்து சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட லொறிகள் தற்போது வவுனியா நகரப் பகுதியில் உள்ள அகதி முகாமுக்கு முன்பாகவும், சர்வோதய அலுவலகத்துக்கு முன்பாகவும் நிறுத்தப்பட்டுள்ளன.

பூந்தோட்டம் பகுதியூடாக இந்த லொறிகளை வடக்கே அனுப்ப முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

இந்த லொறிகள் இங்கு வந்து சேர்ந்ததும் பொருள்களின் விலை வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. வெங்காயத்துடன் சென்ற பல லொறிகள் வவுனியா நகரத்துக்கு செல்ல முடியாத நிலையில் ஓமந்தையில் தரித்து நிற்பதாக அறிய வந்தது. (உ-3)

# வருடப் பிறப்புடன் யுத்த நிறுத்தம்?

## லண்டனில் கிட்டு கூறியதாகத் தகவல்

லண்டன், டிச. 27

புது வருடம் பிறந்து முதலாம் திகதி முதல் -அதாவது எதிர்வரும் திங்கட்கிழமை நள்ளிரவு முதல்- இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு வடக்கு, கிழக்கில் போர் நிறுத்தம் ஒன்று ஏற்படலாம்;

இத்தகைய போர் நிறுத்தம் ஒன்றை விடுதலைப் புலிகள் இயக்கம் கடைப் பிடிக்கும் என்று லண்டனில் உள்ள அந்த இயக்கத்தின் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் [கிட்டு] கூறியதாக ஏ.எவ். [illegible] அறிவித்தது.

ஆனால் இச்செய்தியில் கூறப்பட்ட தகவல் உண்மை தானா என்பதை யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் உர்ஜிதம் செய்யவில்லை. [illegible] புத்தாண்டுப்பிறப்பை ஒட்டி இப்போர்நிறுத்தம் சில தினங்கள் கடைப்பிடிக்கப்படும் என்றும்-

அதன் பின்னர் இராணுவத்திற்கு எதிரான போராட்டம் தொடரும் என்றும் கிட்டு கூறியதாக ஏ. எவ்.

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழர் விடயம்:

# இந்திய நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் இல்லை!

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இந்திய அரசின் அணுகு முறையில் மாறுதல் எதுவும் இல்லை.

பிரதமர் சந்திரசேகர் புதுடில்லி திரும்பும் முன்னர் சென்னையில் செய்தியாளரிடம் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறித்து மத்திய அரசாங்கம் தனக்கு என்று ஒரு கருத்தைக் கொண்டுள்ளது.

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் போராளிகளின் நடமாட்டம் குறித்து மத்திய நிறுவனங்கள் மூலம் புதுடில்லி அரசுக்கு தகவல்கள் கிடைத்து வருகின்றன.

இந்தியாவுக்கு பிரச்சினை தரக்கூடிய எதனையும் விடுதலைப் புலிகள் தமிழகத்தில் மேற்கொள்ளக்கூடாது.

போராளிகளின் நடமாட்டம் குறித்து மாநில அரசும் கடலோரப் பகுதி மக்களும் தான் உண்மை நிலையை வெளியிடவேண்டும்.

போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த மாநிலஅரசின் கோரிக்கையை ஏற்று எல்லைக் காவல் படையை மத்திய அரசு அனுப்புகிறது.

இப்படி பிரதமர் சந்திரசேகர் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-எ)

# அகதிகளை இடம்மாற்ற இந்தியா எதிர்ப்பு!

புதுடில்லி, டிச. 27

தமிழ் நாட்டில் அகதி முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கையில் நிறுவப்படவுள்ள அகதி முகாம்களுக்கு இடமாற்றம் செய்யலாம் என்ற கொழும்பு அரசின் யோசனையை புதுடில்லி அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கையில் நிறுவப்படவுள்ள புதிய முகாம்களுக்கு இந்திய முகாம்களில் உள்ள அகதிகளை இடமாற்றம் செய்வதால் எதுவித பிரயோசனமும் ஏற்படாது என்று இந்தியா, இலங்கைக்கு கூறியுள்ளது.

மாலைதீவில் அண்மையில் பிரதமர் சந்திரசேகரும், பிரதமர் டி. பி. விஜேதுங்காவும் இது தொடர்பாக கருத்துப் பரிமாறினர் என்றும் —

அப்போதே திரு. சந்திரசேகர் ''ஒரு முகாமில் இருந்து இன்னொரு முகாமுக்கு அகதிகளை இடமாற்றம் செய்வது பிரச்சினையைத் தீர்க்காது'' என்று தெரிவித்தார் என்று கூறப்படுகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகள் வடக்கு – கிழக்கில் உள்ள தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பக் கூடியதான அமைதி நிலையை உருவாக்குவதே இலங்கை அரசின் தற்போதைய பொறுப்பு ஆகும் என்றும் திரு. சந்திரசேகர் இலங்கைப் பிரதமரிடம் அப்போது தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருப்பதனால் அங்கு அரசியல், சமூக மற்றும், பொருளாதார சிக்கல்களைத் தோற்றுவித்திருப்பதாகவும் பிரதமர் சந்திரசேகர் இலங்கைப் பிரதமரிடம் சுட்டிக் காட்டினார் என்று புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன. (இ-எ)

# ஜெயலலிதா வீட்டுக்கு சென்ற சந்திரசேகர்

இந்திய அரசியல் நிலை மற்றும் தமிழ் நாட்டின் சட்டம் — ஒழுங்கு பிரச்சினை ஆகியன குறித்து அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுடன் பேசினார்.

இந்தியப் பிரதமர் சந்திரசேகர் செல்வி ஜெயலலிதாவை அவரின் வீட்டுக்குச் சென்று சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் முன்கண்டவாறு சொன்னார்.

இச்சந்திப்புக் குறித்து செல்வி ஜெயலலிதா செய்தியாளர்களிடம் சொன்னதாவது;

தமிழகக் கடலோர மாவட்டங்களில் இலங்கைப் போராளிகளின் நடமாட்டம் குறித்து பிரதமருடன் பேசினேன்.

மத்திய அரசுக்கு அ.தி.மு.க. நிபந்தனையற்ற ஆதரவே வழங்கி வருகிறது.

சந்திப்பின் போது பிரதமரிடம் நான் எந்தக் கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை. ஆனால், தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்று அ. தி. மு. க தொடர்ந்து வற்புறுத்தி வரும்.

இப்படி செல்வி ஜெயலலிதா சொன்னார். (இ-எ)

# கைது செய்யப்பட்டவர்களில் 4,000பேர் அதி தீவிரவாதிகள்

தென் பகுதித் தடுப்பு முகாம்களில் காவலில் வைக்கப்பட்டுள்ள ஜே. வி. பி. தீவிரவாத சந்தேக நபர்களில் 4 ஆயிரத்துக்கு அதிகமானோர் அதிதீவிரவாதிகள் என்று அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் சரணடைந்தோர் ஆகியோர் பற்றிய ஆணைக் குழு விசாரணைகளின்போது இது தெரிய வந்திருப்பதாகக் கூறப்பட்டது.

கடந்த 11 ஆம் திகதி வரை 14 ஆயிரத்து 461 சந்தேக நபர்கள் பற்றிய விசாரணையை மேற்படி ஜெயலத் ஆணைக் குழு முடித்துள்ளதாகவும் கூறப்பட்டது. [உ-எ]

# 400 ரெலோவினரை விடுவிக்கக் கோரிக்கை

கொழும்பு. டிச. 27

தமிழகத்தில் கைதான 400 ரெலோ உறுப்பினர்களை விடுதலை செய்யும்படி இந்தியப் பிரதமர் சந்திரசேகருக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதமர் சந்திரசேகருக்கு எழுதப்பட்ட கடிதத்தை ரெலோ எம். பி யான கருணாகரன் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்திடம் கையளித்தார். (உ-எ)

# புலிகள் பற்றி கருத்துக் கூற பிரதமர் சந்திரசேகர் மறுப்பு

புதுடில்லி, டிச. 27

இலங்கை, வடக்கு – கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பற்றிக் கருத்து வெளியிட இந்தியப் பிரதமர் சந்திரசேகர் மறுத்து விட்டார்.

தமிழகத்துக்கு விஜயம் செய்த அவரிடம் செய்தியாளர்கள் இதுபற்றிக் கேட்டபோதே கருத்து வெளியிட அவர் மறுத்தார்.

''விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழகத்தில் இருப்பது குறித்துத் தான் நாம் கவனித்து வருகின்றோம்.

விடுதலைப் புலிகள் இலங்கையில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து நான் கருத்து வெளியிட விரும்பவில்லை'' — என்றார் அவர்.

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் குறித்து முதலமைச்சர் கருணாநிதியுடன் உரிய நேரத்தில் நான் பேசுவேன் என்றும் —

தற்போதைக்கு தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி ஏற்படுத்தப்பட மாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். [உ-எ]

## சம உரிமை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னத்தைக் கொண்டுவர டிசம்பர் 3 ஆம் திகதி முன்னறிவித்தல் கொடுத்திருந்தனர்.

இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. திருமதி ஒட்டி நவம்பர் மாதத்தில் மற்றும் நால்வருடன் இலங்கைக்கு வந்து இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடற்படை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுடன் எம்மைக் கடற்படைப் படகில் ஏற்றிய படையினர், மழையில் நாம் நனைந்து கொண்டிருக்கும்போது முடிச்சுப் போட்ட கயிற்றினால் மாறி, மாறி எம்மைத் தாக்கினர்.

மன்னார் முகாமில் எம்மைத் தடுத்து வைத்திருந்த போது – மோதல்களில் காயமுற்ற கடற்படையினரை முகாமுக்குக் கொண்டுவரும் போதெல்லாம் - அங்கு மாறி, மாறி வரும் சிப்பாய்கள் எம்மை 'கொட்டியா' என்று கூறித் தாக்கினார்கள்.

விடுதலையாகி வரும் வரை அவர்கள் எம்மை நடத்தும் விதத்தைக் கண்டு உயிர் பிழைத்து வருவோமா என்று பெரும் பீதியுடனேயே நாம் காலத்தைக் கழிக்க வேண்டியிருந்தது - என்றார் அவர். (உ-51)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிச. 27

யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. கு. ரஞ்சகுமார் எழுதிய ''அரசறிவியலின் அடிப்படைத் தத்துவங்கள்'' என்ற நூலின் வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 2-15 மணிக்கு யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறை விரிவுரைமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (உ-3)

## பயிற்சி நெறி திகதி மாற்றம்

யாழ்ப்பாணம், டிச. 27

புதிதாக தெரிவான முதலாம், இரண்டாம் தர அதிபர்களுக்கு யாழ். கல்வித் திணைக்களம் யாழ் இந்துக் கல்லூரியில் நடத்தும் முகாமைத்துவ பயிற்சிநெறித் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது,

முதலாம் தர அதிபர்களுக்கு எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளிலும்—

இரண்டாம் தர அதிபர்களுக்கு 30,31 ஆம் திகதிகளிலும் பயிற்சி நெறிகள் நடைபெறும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## குஜராத்தில் அரசியல் நெருக்கடி

புதுடில்லி, டிச. 26

இந்திய மாநிலங்களில் ஒன்றான குஜராத்தில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

இந்திராகாங்கிரஸின் ஆதரவுடன் இயங்கும் ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சி அரசு பெரும்பான்மைப் பலத்தை இழந்து விட்டதாக பாரதிய ஜனதாக் கட்சி அறிவித்துள்ளது.

## பயணிகள் பயந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 24ஆம் திகதி வவுனியா வந்துசேர்ந்தேன். ஊரடங்கு அமுலில் இருந்ததால் வவுனியாவுக்கு இப்பால் வரமுடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே அங்கு தங்கிநின்ற சுமார் ஐநூறுக்கும்மேற்பட்ட பயணிகளுடன் நானும் பாடசாலை முகாமில் தங்கியிருந்தேன்.

மறுநாள் 25ஆம் திகதி காலை பொலீஸ் அதிகாரி ஒருவர் வந்து, வடக்கே செல்ல எங்களுக்கு அனுமதி கிடைத்துள்ளதாகச் சொன்னார்.

### எச்சரித்தனர்

எமக்கு முன்பாக 75 பேருக்கும் மேற்பட்டவர்கள் முதலில் சென்றனர். இராணுவத்தினர் காட்டிய பாதை வழியாகச் செல்லப் பயந்த பயணிகள் பலர் திரும்ப முற்பட்டனர். அப்போது இராணுவத்தினர் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம்செய்து, அவர்களைத் திரும்பிச் செல்லுமாறு நிர்ப்பந்தித்து, எச்சரித்தனர்.

அதனையடுத்து அவர்கள் திரும்பி அவ்வழியே சென்றனர்.

எங்களை ''கியூ''வில் விட்டு எந்தவித சோதனையும் செய்யாது வர அனுமதித்தனர்.

### வெடித்தது

சேறும் சகதியும் நிறைந்த நிலப்பகுதியில், ஓர் ஒற்றையடிப் பாதை வழியே நாங்கள் 45 பேர் நடந்தோம். திடீரென மிதி வெடி ஒன்று வெடித்தது!

எனக்கு அருகில் சைக்கிளுடன் வந்து கொண்டிருந்த ஓமந்தையைச் சேர்ந்த இராமலிங்கம் என்பவரது சைக்கில் சுக்கு நூறாகப் பறந்தது. பயணிகள் பலர் கூக்குரலிட்டு அழுதனர்.

அடுத்து இன்னொரு மிதி வெடி வெடித்ததில் அவரது கால் ஒன்று சிக்கிச் சிதைந்தது. எனது மூக்குக் கண்ணாடி சிதறி எங்கோ பறந்தது. முகத்திலும் காயம் ஏற்பட்டது. எனக்கு அருகில் வந்து கொண்டிருந்த இன்னொரு இளைஞனும் காலை இழந்தார். ஒரு பெண்ணும் கடும் காயமுற்றார்.

இதனை அடுத்து- பயணிகள் அடி எடுத்து வைக்கப் பயந்து கதறி அழுதுகொண்டு நின்றனர்.

எனினும் திரும்பிச் சென்றால் இராணுவத்தினர் சுட்டு விடக்கூடும் என்று பயந்து ஒருவர் பின்னே ஒருவராக நடந்துநொச்சிமோட்டையை வந்தடைந்தோம்,

நாங்கள் மிதிவெடிப் பகுதியைத் தாண்டிய பின்னரும் அப்பகுதியில் மிதி வெடிகள் வெடிக்கும் சத்தம் கேட்டது. எமக்குப் பின்னால் வந்த பயணிகள் பலர் காயமடைந்திருக்கலாம்–

இவ்வாறு பயணி தமது திகில் அனுபவத்தைத் தெரிவித்தார். [அ-5]

## இரத்தப்...

(1ஆம் பக்கத் தொடர்க்சி)

தேசக் குழுவினருடன் வந்த இராணுவத்தினர் காயமுற்றோரை சிகிச்சைக்கு கூட்டிச் சென்றனர்.

எனினும் அவர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்களா அல்லது அநுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார்களா என்பது இன்னும் தெரியவரவில்லை.

இராணுவத்தினர் தாம் வைக்கும் மிதிவெடிகள் சரியாகச் செயற்படுகின்றனவா என்பதைப் பரீட்சித்துப் பார்க்க அவர்கள் பொதுமக்களைப் பயன்படுத்துகிறார்கள்.

மூதூரைச் சேர்ந்த பச்சனூரிலும் இராணுவத்தினர் இவ்வாறு செய்தது குறிப்பிடத்தக்கது அச் சம்பவத்தில் ஒரு சிறுமி காலை இழந்தார்; மற்றொரு சிறுமி கண்ணில் காயமுற்றார் என்பது தெரிந்ததே. (அ)

## வருடப்பிறப்புடன் ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பியை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

போர் நிறுத்த காலத்தில் இராணுவம் முகாம்களுக்குள்ளே இருக்க வேண்டும் என்றும் இட்டு கூறியதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் இப்போர் நிறுத்தத்திற்கு இலங்கை அரசு உடன்படுகிறதா என்பது இன்னும் தெரியவில்லை என்றும் அச்செய்தியில் கூறப்பட்டது.

யுத்த நிறுத்த அறிவிப்புக் குறித்து லண்டனில் உள்ள இலங்கைத் தூதர் மேஜர் ஜெனரல் சேபால ஆட்டிக்கலவிடம் வினவியபோது–

தாம் இன்னும் கொழும்பு அரசுடன் தொடர்புகொள்ளவில்லை என்றும், அதுவரை இது குறித்துத் தம்மால் ஏதும் கூறமுடியாது என்றும் சொன்னார். [உ-எ]

# ரஷ்ய பிரதமரின் நிலை; குழப்பமான தகவல்கள்

மாஸ்கோ, டிச. 27

சோவியத் பிரதமர் நிக்கொலாய் ரிஷ்கோவ் மாரடைப்புக்கு ஆளானார் என்று ஜனாதிபதி கோர்ப்பச்சேவ் நேற்று சோவியத் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்

திரு. கோர்பச்சேவின் சீர்திருத்தக் கொள்கைக்கு மாறுபாடான கருத்தை ரிஷ்கோவ் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. ரிஷ்கோவை பிரதமர் பதவியில் இருந்து விலக்க எடுக்கப்படும் முயற்சியாக இது இருக்கலாம் என்று மாஸ்கோவில் உள்ள பி.பி.சி செய்தியாளர் தெரிவித்தார்.

இதற்கிடையில்—

சோவியத் பிரதமர் ரிஷ்கோவுக்கு ஏற்பட்ட சுகயீனம் ஓர் ''அரசியல் மாரடைப்பு'' என்றும் பி. பி. சி அறிவித்தது. [உ-எ]

# 500ரூபா கள்ளநோட்டு தமிழகத்தில் தயாரிப்பு!

## ஈ.பி.ஆர்.எல்.எவ் பின்னணி?

தமிழ்நாடு, காசிநகர் என்னும் இடத்தில் அச்சிடப்பட்டதாகக் கூறப்படும் 500 ரூபா கள்ளநோட்டுக்களை வைத்திருந்த சிங்கள மீனவர் ஒருவரை இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்பைச் சேர்ந்த இந்த மீனவரிடம் இருந்து 24 ஐந்நூறுரூபா கள்ளநோட்டுக்களை பொலிஸார் கைப்பற்றினர்.

அடிக்கடி கள்ளக்கடத்தல் நடவடிக்கைகளுக்காக இந்தியா சென்று வந்ததாகக் கருதப்படும் இந்த மீனவரிடம் இந்தியாவில் வைத்து இந்தியப் பிரசை ஒருவர் கள்ளநோட்டுக்களைக் கொடுத்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

தமிழ்நாடு, காசிநகர் பகுதியில் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கப் போராளிகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது.

அதனால் கள்ள நோட்டு அச்சிடப்படுவதன் பின்னால் இந்த இயக்கப் போராளிகள் இயங்கக்கூடிய வாய்ப்பு இருக்கலாம் என்று இரகசியப் பொலிஸார் சந்தேகிப்பதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டது. (உ-எ)

# பிறக்கும் ஆண்டில் இங்கு கடும் வரட்சி?

## பிரபல விஞ்ஞானி தகவல்

பிறக்கப் போகும் அடுத்த ஆண்டு இலங்கையில் கடும் வரட்சி ஏற்படலாம்.

பிரபல பௌதீக விஞ்ஞானி பேராசிரியர் ஒஸ்மண்ட் ஜயரத்தின இப்படி எச்சரித்துள்ளார்.

பசுபிக் சமுத்திரத்தில் ஏற்பட்டுள்ள 'எல்நினோ' என்ற பெயரிலான மாற்றம் காரணமாகவே இலங்கை கடும் வரட்சியினால் பாதிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (உ-எ)

# வெளிநாட்டு முதலீட்டாளர் வர்த்தக வீஸா பெறவேண்டும்

கொழும்பு, டிச. 27

இலங்கையில் முதலீடு செய்ய வரும் சகல வெளிநாட்டவர்களும் வர்த்தக வீஸா பெற்றிருக்க வேண்டும்.

குடியகல்வு — குடிவரவு கட்டுப்பாட்டதிகாரி இப்படி அறிவித்திருக்கிறார்.

ஆரம்பத்தில் வர்த்தக வீஸா 2 வாரங்களுக்கு அந்நாட்டில் உள்ள இலங்கைத் தூதர்களினால் வழங்கப்படும்.

பின்னர் கொழும்பில் குடியகல்வு, குடிவரவு கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பித்து வீஸா கால எல்லையை நீடித்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கம்யூனிஸ வீழ்ச்சி!

இந்த வருடத்தில், சர்வதேச அரசியலில் ஏற்பட்ட மிக முக்கியமான, வரலாற்று ரீதியான மாற்றம், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்த கம்யூனிஸம் அப்புறப்படுத்தப்பட்டதே ஆகும்.

கார்ல்மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் கம்யூனிஸ சித்தாந்தங்களும், கோட்பாடுகளும், தத்துவங்களும், நடைமுறைகளும் அரை நூற்றாண்டு கால அனுபவத்தில் கிழக்கு ஐரோப்பியர்களுக்குக் கசந்து விட்டன. அந்த நாடுகளில் கொடிகட்டிப் பறந்த, அதிகாரக் கோலோச்சிய கம்யூனிஸம் ஒவ்வாதது என்று கணிக்கப்பட்டு, அதன் சகாப்தம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. சனநாயக அரசியல், ஆட்சிமுறை என்ற புதிய யுகம் கிழக்கு ஐரோப்பியப் பிராந்தியத்தில் தலை எடுத்திருக்கிறது.

இந்த யுக மாற்றத்துக்கு வழிவகுத்தது கம்யூனிஸத்தின் தலைமை ஆசானாக விளங்கிய ரஷ்யாவேயாகும்.

கிழக்கு ஜெர்மனியிலேயே கம்யூனிஸம் முதலில் வீழ்ச்சி கண்டது. தொடர்ந்து செக்கோசிலவாக்கியா, ஹங்கேரி, போலந்து, பல்கேரியா ஆகிய நாடுகளில் எழுச்சி கொண்ட மக்கள் அலை, இப்போது அல்பேனியாவில் வந்து நிற்கிறது. கியூபாவில் மட்டுமே சலசலப்பு எதுவும் இல்லாமல் கம்யூனிஸம் தொடர்கிறது. வடகொரியாவிலும் ஆட்டம் கண்டு வருகிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸம் வீழ்ச்சி கண்டதால், அங்கெல்லாம் உள்ளுக்குள் மூடி மறைக்கப் பட்டிருந்த பொருளாதாரச் சீர்கேடுகள் இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளன. பொருளாதாரச் சீர்திருத்தத்துக்கு ஒவ்வொரு நாடும் வெவ்வேறு வழிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கி உள்ளன.

பல்கேரியாவில் நவம்பர் மாதம் முதல் 100 நாள் பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. செக்கோசிலவாக்கியாவிலோ தேசியவாதம் தலை தூக்கியுள்ளது. ஹங்கேரியில் நாணய வீக்கம் 35 சதவீதமாக உயர்ந்துள்ளது. போலந்தில் மக்களின் வருமானம் வீழ்ச்சி கண்டுள்ளது. இப்படிப் பல.

இந்த வரலாற்று மாற்றம், கம்யூனிஸ சகாப்த முடிவு, கிழக்கு ஐரோப்பாவின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு வழிவகுக்குமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸம் வீழ்ந்து போனமை, முதலாளித்துவத்துக்கும், மேற்கு ஐரோப்பாவின் ஏதேச்சாதிகாரத்துக்கும் கிடைத்த வெற்றியாக எழுந்தமானப் பார்வைக்குத் தெரியலாம்.

ஆனால் கம்யூனிஸம் ஸ்தாபன ரீதியான பயங்கரவாதமாக விளங்கியது என்றும் அதன் வீழ்ச்சி காரணமாக தனிநபர் பயங்கரவாதம் மலிந்துவிடும் என்றும் மற்றொரு கருத்து மேற்குலகில் நிலவுகிறது.

கம்யூனிஸத்தைத் துறந்து, சனநாயகத்தை நாடியுள்ள நாடுகள் வேறு புதியவழி தேடிச் செல்லாமல் தடுப்பதற்கு, அமெரிக்கா தனது நிதிவளத்தை அத்திசைக்குப் பெருமளவில் திருப்பநேரிடும்.

# தென்னிலங்கை பிரதிநிதியின் முயற்சி கோலாலம்பூர் மாநாட்டில் முறியடிப்பு

## அரசின் போர் தமிழருக்கு எதிரானதே என்று நிலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிச.27

வடக்கு-கிழக்கில் அரசாங்கம் புலிகளுக்கு எதிராகப் போராடவில்லை. தமிழ் மக்களுக்கு எதிராகப் போராடி அவர்களுக்குப் பல இன்னல்களையும் விளைவித்து வருகிறது.

இந்த உண்மை, அண்மையில் கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசிய நாடுகளின் திருச்சபை மாநாட்டில் நிலை நிறுத்தப்பட்டது.

அது புலிகளுக்கு எதிரான போர் என்று நிலைநாட்ட முயன்ற தென்னிலங்கைப் பிரதிநிதியின் முயற்சி முறியடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, யுத்தத்தினால் பாதிக்கப்படும் தமிழ்க் குழந்தைகளுக்கு உதவும் திட்டங்களைத் தயாரிக்க மாநாடு முடிவு செய்தது.

ஜப்பான், அவுஸ்திரேலியா, தாய்லாந்து, இந்தியா, மலேசியா உட்பட 14 ஆசிய நாடுகள் பிரஸ்தாப மாநாட்டில் கலந்து கொண்டன.

இலங்கையிலிருந்து சென்ற பிரதிநிதிகளில் தென்னிலங்கையைச் சேர்ந்த பிரதிநிதி செல்வி எஸ். பெர்னாண்டோ வடக்கு-கிழக்கில் நடப்பது விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தமே என்று நிலைநாட்டி பிரதிநிதிகளை நம்ப வைக்க முயன்றார்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பிரதிநிதி விட்டுக் கொடுக்கவில்லை. அரசு நடத்தும் யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதே என்பதைப் புகைப்படங்கள் சகிதம் விளக்கினார்; நம்பவைத்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதிநிதிகள் உண்மை நிலையைப் புரிந்து கொண்டனர். தாம் இதுவரை கேள்விப்பட்டதும் உண்மை நிலையும் வித்தியாசமாக இருப்பதை அறிந்து அதிர்ச்சி உற்றனர்.

உண்மை நிலையைப் புரிந்து கொண்டு, வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கையால் குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து மாநாட்டில் ஆராய்ந்தனர்.

அவர்களுக்கு உதவும் திட்டங்களைத் தயாரிக்கவும் முடிவு செய்தனர். (அ-3)

## ஜனவரி முதல் மீண்டும் தலைக் கவசம்

கொழும்பு, டிச.27

மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் ஓட்டுபவர்களும் பின்னால் அமர்ந்து செல்பவர்களும் 1 - 1 - 1991 முதல் மீண்டும் தலைக்கவசம் அணிந்து செல்ல வேண்டும்.

இப்படிப் பொலிஸ்தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது. (இ-எ)

## சோமவன்ஸ தப்புவதற்கு உதவிய பெண் சிப்பாய்!

### நீதிமன்றத்தில் ஆஜர்

கொழும்பு, டிச. 27

ஜே. வி. பியின் தற்போதைய தலைவரான சோமவன்ஸ அமரசிங்கா இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல உதவியதாகக் கூறப்படும் இலங்கைக் கடற்படை பெண் சிப்பாய் ஒருவரை கடந்த வாரம் பொலிஸார் கொழும்பு நீதிவான் முன் ஆஜர் செய்தனர்.

இந்தப் பெண் சிப்பாய் சோமவன்ஸ அமரசிங்காவை தனது வீட்டில் அடைக்கலம் கொடுத்து வைத்து இருந்ததாகவும்—

பின்னர் அவர் தப்பிச் செல்ல உதவியதாகவும் நீதிமன்றத்தில் பொலிஸார் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைக்குச் செல்லாத

# மாணவரை வீட்டுக்குள் புகுந்து தேடிக் கண்டுபிடிக்க அதிகாரம்

## அரச உயர் அதிகாரிகளுக்கு வழங்கச் சட்டம்

கொழும்பு, டிச. 27

பாடசாலைக்குச் செல்லாத 5 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகளை வீடு வீடாகச் சென்று தேடிக் கண்டு பிடிக்கும் அதிகாரம் அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது.

இலங்கைக் கல்வி நிர்வாகச் சேவை இலங்கை பாடசாலை அதிபர்கள் சேவை ஆகியவற்றில் இருந்தும்-

மாகாணங்களில் உள்ள அரச அதிபர்களில் இருந்தும் இந்த அதிகாரிகள் தெரிவு செய்யப்படுவர்.

இவர்கள் தங்களுக்குப் பதிலாக வேறு பிரதிநிதிகளையும் இப்பணியில் ஈடுபடுத்தும் அதிகாரத்தையும் பெறுகின்றனர்.

வீடுகளுக்குள் புகுந்து பாடசாலை செல்லாத குழந்தைகளைத் தேடும் அதிகாரிகளுக்கும், அவர்களின் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்படும் இதற்கான சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## வங்கி முகாமையாளர் ஒருவர்

# ஒரு கோடி ரூபா பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, டிச.27

கையாடல் குற்றம் சுமத்தப்பட்ட முன்னாள் வங்கி முகாமையாளர் ஒருவரை ஒரு கோடி 25ஆயிரம் ரூபா பிணையில் செல்ல கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிவான் திருமதி மஹேஷி குணதிலக அனுமதி அளித்தார்.

இலங்கை வர்த்தக வங்கி கொள்ளுப்பிட்டி கிளையின் முகாமையாளர் ஒருவருக்கு இவ்வாறு பெருந்தொகைப் பிணையாகச் செலுத்த உத்தரவிடப்பட்டது

வங்கிக்குச் சொந்தமான 13 லட்சத்து 29 ஆயிரம் ரூபா பணத்தைக் கையாடல் செய்ததாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ஒரு கோடி ரூபா உறுதிப் படுத்தப்பட்ட பிணையாகவும்-

எஞ்சியது பணமாகவும் செலுத்தப்பட வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். (உ-எ)

## இருவர் கைது

வேலணை வங்களாவடிச் சந்தியில் இடம் பெற்ற கடை உடைப்புச சம்பவங்கள் தொடர்பாக புங்குடுதீவைச் சேர்ந்த இருவர் வேலணைப் பிரதேச விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டனர்.

இது தொடர்பாக மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர். (இ-125)

# அரசாங்கத்தின் செலவிலேயே அரசியல் நடத்தும் குழுக்கள்!

## ரஞ்சனின் விமரிசனம்

கொழும்பு, டிச. 27

சில தமிழ்க் குழுக்கள் கொழும்பில் தங்கியிருந்து சாப்பிட்டு, படுத்துக்கொண்டு அரசாங்கத்தின் செலவில் அரசியல் நடத்தப்பார்க்கின்றன.

- இவ்வாறு விமர்சித்திருக்கிறார் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன.

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என சில தமிழ், முஸ்லிம் அரசியல் குழுக்கள் கூறிவருவது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அமைச்சர் இந்த விமரிசனத்தை வெளியிட்டார்.

அமைச்சர் ரஞ்சன் மேலும் கூறியதாவது:-

நாங்கள் ஒரு யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும் போது சில தமிழ் - முஸ்லிம் குழுக்கள் அங்கு ஆட்சி நடத்த நாம் எப்படி அனுமதிக்க முடியும்?

நான் முன்னர் கூறியது போல் அவர்கள் தங்கள் வழியில், அரசியலில் போராட வேண்டும்.

கொழும்பில் இருந்து சாப்பிட்டுப் படுத்துக் கொண்டு எங்களுடைய செலவில் அரசியல் நடத்தப் பார்க்கின்றனர்.

அவர்களும் முன்வந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகப்போராடட்டும்.

செ[...] னர்ால் [...]

ஆயுதம் தூக்க வேண்டுமென எண்ணுகிறீர்களா?

அமைச்சர்:- ஏன் இல்லை? அவர்களுக்குக் கூறுங்கள் ஈ.பி.டி.பி, புளொட், ரெலோ போன்ற எமது படையில் சேரச்சொல்லி.........

செய்தியாளர்:- அரசபடைகளுடன் இணைந்து ஈ.பி.டி.பி. புளொட், ரெலோ போன்றவை போராடுவதால் அவர்களை, அப்பகுதிகளை நிர்வகிக்க அனுமதிக்கப் போகிறீர்களா?

அமைச்சர்;- இல்லை. அவர்கள் சண்டையிடுகின்றனர். அதனால் நிர்வகிக்க நேர [...]

(இ-உ)

## நூல் வெளியீடு

எழுத்தாளர் திரு. து. வைத்திலிங்கம் எழுதிய "ஒருதிட்டம் மூடப்படுகிறது" என்னும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 30 மணிக்கு சுழிபுரம் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும்.

கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. குணராசா வெளியீட்டுரையையும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா, யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் எம். சின்னத்தம்பி ஆகியோர் மதிப்பீட்டுரைகளையும் நிகழ்த்துவார்கள். [இ - 3]

# உலகச் செய்திகள்

## பாண்டிச்சேரி நம்பிக்கையில்லா பிரேரணை

புதுச்சேரி, டிச. 27

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச தி. மு. க. அரசு மீது கொண்டு வரும் நம்பிக்கைப் பிரேரணையை விவாதிக்க சட்டசபையின் சிறப்புக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறும்.

தி. மு. க. அரசுக்கு ஆதரவளித்து வந்த நான்கு ஜனதாதள் எம். எல். ஏக்களின் மூவர், தமது ஆதரவைவிலக்கிக் கொண்டதால் தி. மு. க. அரசு பெரும்பான்மை பலத்தை இழந்துவிட்டது என்று கூறப்படுகிறது. (இ - எ)

## துருக்கி விமானம் ஈராக்கிற்குள் அத்துமீறல்

பக்தாத், டிச. 27

துருக்கியின் இரண்டு யுத்த விமானங்கள் ஈராக்கிய பிராந்தியத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்தன என்று பக்தாத் அரசு குற்றம் சாட்டியுள்ளது.

ஈராக்கின் வடக்கு எல்லையில் துருக்கி நாடு உள்ளது.

குவைத் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, ஈராக் மீது ஐ. நா. விதித்த பொருளாதார முற்றுகையை உடனடியாக அமுல் நடத்தத் தொடங்கிய முதலாவது நாடு துருக்கி ஆகும் என்பது குறிப்பிடத் தக்கதாகும். (இ-எ)

## இராணுவப் புரட்சி

லண்டன், டிச. 27

தென் அமெரிக்க நாடான சுரிணாமில் இராணுவப் புரட்சி இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ஷாங்கர் தலைமையிலான சிவிலியன் அரசு கவிழ்க்கப்பட்டு விட்டதாக இராணுவத்தின் பதில் தளபதி ஐவன் நேற்று அறிவித்தார். (இ-எ)

## நல்லூர் நாவலர் பெருமானின் பணிப்பு

பாவை பாடிய வாயால் கோவை பாடுக என்று சிவபெருமான் வாயால் கேட்கும் பெருந் தகுதியை மணிவாசகருக்குக் கொடுத்தது திருவெம்பாவையே. ஏன்? சிவபெருமான் தன் கையாலேயே திருவாசகத்தை எழுதி திருச்சிற்றம்பலமுடையான் என்று கையெழுத்தும் போட்டு வைக்க ஊற்றாய் நின்றதும் திருவெம்பாவையே.

திருவெம்பாவைக்குரிய பத்து நாட்களும் பவுத்திரமானவை. பயனுள்ளவை. சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்பவர்கள் சிவபுரத்துள் சென்று திரும்பும் சுகானுபவத்தைப் பெறுவர்.

இப் பத்து நாட்களை விழாவாக்கி பயன் கூட்டும் சிவாலயங்களும், சிவனடியார் திருக்கூட்டங்களும் தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் உண்டு.

திருவெம்பாவைக் காலத்தில் பிற திருமுறைகளுக்குக் காப்புக் கட்டிவைத்து விட்டு திருவாசகத்தையே ஓதி ஓதி உருகவேண்டுமென்பது நல்லூர் ஆறுமுகநாவலர்பெருமானின் பணிப்பாகும். இப்பணிப்புரை இந்திய அருளாளர்களால் உச்சிமேல் வைத்துக் கொண்டாடப்படுவது.

திருவாசகத்திற்கே உரிய சிறப்புகளில் ஒன்று, அதனை எழுதிய ஏடு பூசைக்கு உரியதாக இருப்பது. இன்னும் பல சிவனடியார்கள் திருவாசக ஏட்டைப் பூசித்து வருகிறார்கள். செட்டிநாட்டிலுள்ள ஒரன்பர் திருவாசகத்தை வெள்ளி ஏடுகளில் எழுதி வைத்துப் பூசிக்கிறாராம். இத்தகைய பெருமை மற்ற நூல்களுக்கு இல்லை. ஒருவாசகத்துக்கும் உருகாதாரை திருவாசகம்உருக்கி ஊற்றி உருப்படியாக்குவதைக் கண்ட பலர் நெஞ்சக்கல்லை நெகிழவைக்க திருவாசகச் சூடு பிடிப்பது நாடறிந்த உண்மையே.

### திருவெம்பாவை சிறப்பம்சம்

புலவர்

ஈழத்துச்சிவானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல: 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 246 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (15000)

**பரீட்சை (ஆண்டு-5)**

பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை [மூன்றாவது] 30-12-90 ஞாயிறு மு.ப. 8.00/ பி.ப. 1.00, 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். அரசடி, கொக்குவில் மேற்கு [மக்கள் வைத்தியசாலை முன்பாக] நடைபெறும். பதிவு செய்யவும். மாதிரி வகுப்புக்களும், புதிய ஆண்டு 4, 5 வகுப்புக்களும் ஆரம்பமாயுள்ளன. [15279]

**அறை வாடகைக்குண்டு**

பெண் பிள்ளைகள் தங்குவதற்கு ஏற்ற அறை வாடகைக்குண்டு. 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம். [14878]

# யுத்தம் முடிவடையும் வரை புனர்வாழ்வு நிதி தரமுடியாது!

## எட்டு மேற்குலக நாடுகள் அரசுக்கு அறிவிப்பு

கொழும்பு, டிச. 27 இலங்கையில் வடக்கு-கிழக்கு யுத்தம் முடியும்வரை புனர்வாழ்வுப் பணிகளுக்கு நிதி உதவி அளிக்க முடியாதென்று எட்டு நாடுகள் கொழும்பு அரசுக்கு நேரடியாக அறிவித்து விட்டன.

இவற்றில் பெரும்பாலான நாடுகள் மேற்குலகைச் சேர்ந்தவை என்று அறிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எதிரான யுத்தம் ஒரு முடிவுக்கு வந்ததன் பின்னர் புனர்வாழ்வுப் பணிகளுக்கு மட்டுப்படுத்தப்படாத அளவு நிதி உதவி வழங்கத் தயாராக இருப்பதாகவும் இந்த நாடுகள் இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளன.

மேற்குலக நாடுகள் இப்படி நிதி உதவியை நிறுத்தியுள்ள காரணத்தினால் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பல புனர்வாழ்வுத் திட்ட வேலைகளை மேற்கொண்டும் செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சர் ஏ. எம்.எஸ். அதிகாரி கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார். (உ-எ)

## மொஸாட்டின் நடவடிக்கைகள்:

## ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்க காமினி விருப்பம்

கொழும்பு, டி. 27 இஸ்ரவேல் உளவு ஸ்தாபனமான மொஸாட்டின் இலங்கை நடவடிக்கைகள் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு முன்சாட்சியமளிக்கமுன்னாள் அமைச்சரான காமினி திஸநாயக்கா விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

ஆணைக்குழுவுக்கு திரு. திஸநாயக்கா கடிதம் எழுதியிருக்கிறார்.

மொஸாட் ஏஜண்டாக இருந்த விக்ரர் ஒஸ்ட்ரோவ்ஸ்கி எழுதிய புத்தகம் ஒன்றில்மொஸாட் தொடர்பு பற்றிய குற்றச்சாட்டுக்கள் வெளியாகின. அதுபற்றிவிசாரணை நடத்தவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூனில் இஸ்ரவேல் நலன்புரிப் பிரிவை அரசு மூடிவிட உத்தரவிட்டசமயம் மகாவலி அபிவிருத்திப் பிரிவில் 142 இஸ்ரவேலர்கள் பணியாற்றி வந்தனர் என்று விசாரணையில் தெரிய வந்தது.

இதனை திரு. காமினிதிஸநாயக்கா மறுத்துள்ளார்.

இதனிடையில்- கனடா சென்று திரு ஒஸ்ட்ரோவ்ஸ்கியைச் சந்தித்த பின்னர் ஜனாதிபதி விசாரணைக்குழு ஆணையாளர் எஸ். டபிள்யு. வடுகொடப்பிட்டியா கொழும்பு திரும்பியிருக்கிறார்.

அதன் பின்னர் ஆணையாளர் இரகசிய அறிக்கை ஒன்றைத் தயாரித்து இருக்கிறார்

அந்த அறிக்கையில் உள்ள விஷயங்கள் அவருக்கும் அவருடன் கனடா சென்று திரும்பிய உதவி பொலிஸ் அதிபர் புண்ணியாடீ சில்வாவுக்கும் மட்டுமே தெரியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## காகித உற்பத்தி வீழ்ச்சி

கொழும்பு, டிச. 27 வாழைச்சேனை காகித ஆலையில் இவ்வருட காகித உற்பத்தியில் வீழ்ச்சு ஏற்படுமென தெரிவிக்கப்படுகிறது.

ஜூன் மாதம் முதல் 5 மாத காலமாக அங்கு நிலவும் அமைதியற்ற சூழ்நிலை காரணமாக ஆலை இயங்க முடியாத நிலையிலிருந்து வருகிறது. [இ-எ]

# 13 மாவட்டங்களில் 12 லட்சம் அகதிகள்

கொழும்பு, டிச. 27 நாட்டில் அகதிகளின் எண்ணிக்கை 11 லட்சத்து 81 ஆயிரத்து 215 ஆக அதிகரித்து உள்ளது.

நாட்டில் உள்ள 25 நிர்வாக மாவட்டங்களில் 13 மாவட்டங்களில் இருந்து இந்த அகதிகள் பற்றிய விவரம் சேகரிக்கப் பட்டுள்ளது.

கொழும்பில் 12 அகதி முகாம்கள் உள்ளன. இவற்றையும் சேர்த்து நாட்டில் 728 அகதி முகாம்கள் உள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இத்தகவல்களைவெளியிட்டுள்ளது. [உ-எ]

## மீண்டும் வைத்திய சேவை

### சம்பந்தன் வைத்தியசாலை

**வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம்**

(யாழ்.ஆஸ்பத்திரி பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக சாந்தி தியேட்டர் அருகே)

முன்பு நடைபெற்ற இடத்தில், நடைபெறுகின்றது. வழமைபோல் வைத்திய நிபுணர்கள் ஆலோசனை, வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்,

—நிர்வாகம்.

22, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
[சாந்தி தியேட்டர் அருகே]
யாழ்ப்பாணம். [15296]

## அறிவித்தல்

**தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்**
**யாழ். மாவட்டம்**
(மருதனாமடம் கல்விக் கோட்டப் பிரிவு)

மருதனாமடக் கல்விக் கோட்டப் பிரிவுக்கான ஓர் நிர்வாகக்குழுவை தெரிவுசெய்யவேண்டி இருப்பதால் இக் கல்விக்கோட்டத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்குனர்களும், பிரத்தியேக வகுப்பு நடத்துனர்களும் தவறாது இக் கூட்டத்திற்கு சமுகம் அளிக்கவும்.

இடம்:- பிற்ஸ்மன் கல்வி நிலையம், மானிப்பாய்.
காலம்:- 28 — 12 — 90 காலை 10 - 00 மணி

மருதனாமடம் கல்விக்கோட்ட தனியார்
கல்வி நிறுவனங்களின் நிர்வாகப் பொறுப்பாளர். [14881]

## ஆன்மசாந்திக் கிரியைகள்



நீர்வேலி
அத்தியார் இந்துக்கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியை

### திருமதி அரவிந்தகுமாரி லோகேஸ்வரன்

அன்னாரின் ஆன்மசாந்திக் கிரியைகள் 29-12-1990 சனிக்கிழமை முற்பகல் 10மணி அளவில் கோப்பாய் தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

ஆத்மசாந்திக் கிரியைகளிற் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்மசாந்தியின் பொருட்டுப் பிரார்த்திப்பதுடன், மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமீ வண்ணம் தங்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

இ. சிவானந்தன்
இந்திரகுமாரி சிவானந்தன்
(மைத்துனரும், சகோதரியும்)

இ. குமாரசாமி
சரஸ்வதி குமாரசாமி
(பெற்றோர்)

இளுவானை ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (15289)

## ST. JOHN'S NURSERY

சென்ஜோன்ஸ் பாலர் பாடசாலையில் சிறுவர்களைச் சேர்ப்பதற்கு விண்ணப்பித்தவர்கள் அது சம்பந்தமாக பாடசாலைக் கட்டடத்தில் 29 - 12 -1990 காலை 9. 00 மணிக்கு சந்திக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

நிர்வாகி

[15291]

சாவகச்சேரியில்

## COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
அனைவரும் சேரலாம் - சேர விரும்புவோர்
28 - 12 - 1990 வெள்ளி
நேரில் வந்து விண்ணப்பிக்கவும்.

## Jaffna Central Academy

REG. No. 12710
" திருவருள் "
ஹெரி வீதி, - பெருங்குளம் சந்தி,
சாவகச்சேரி. [15293]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்:
26 - 09 - 1919
விண்ணில்:
27 - 11 - 1990

### திருமதி சின்னம்மா தாமோதரம்பிள்ளை

எங்கள் வாழ்வில் வழிகாட்டியாய் இருந்த நீங்கள் விண்ணில் நின்றும் வழிகாட்டி ஆசீர்வதிக்க இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் ஆத்மசாந்திக்காக என்றென்றும் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் மரணச்சடங்கில் பங்குபற்றி எங்களுக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தம்மலை, அளவெட்டி. (15292)

## மரண அறிவித்தல்

### திருமதி விசாலாட்சி சின்னத்துரை முதலியார்

கட்டுடையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை முதலியாரின் அன்பு மனைவி விசாலாட்சி சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓங்காரவடிவேலு முதலியார் [விரிவுரையாளர், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி], திரு. பொன்னம்பலம் முதலியார் [முன்னாள் தலைவர், மானிப்பாய் பட்டின சபை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மானிப்பாய்] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று [27-12-90] 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
சி. பொ. வ. ம. க. முதலியார்
கட்டுடை,
மானிப்பாய். (14882)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 295/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org